போலீஸ் இலாகா சிப்பந்திகள் (திருத்தணி)

* 86-டி கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

6—4—1960 அன்று படாஸ்கர் தீர்வின்படி தமிழ் நாட்டுடன் இணைக்கப்பெற்ற திருத்தணி தாலூகாவில், போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு அரசாங்க சம்பள விகிதப்படி சம்பளமும், அலவன்சும் பெறுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir. Pay and allowances are being paid to them on the same scales as they were drawing in the Andhra Pradesh State immediately before they were transferred to this State.

துறையூர் அரசாங்க ஊழியர் சங்கம் (முறையீடு)

* 86-இ கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு என்.ஜி.ஜி.ஓஸ். அசோசியேஷன் துறையூர் சென்டரிலிருந்து வீட்டு வாடகைச் சலுகை கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—ANSWERING OF MAIN QUESTIONS IN TAMIL.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, மன்றத்தில் எழுப்பப்படுகின்ற வினாக்கள் தமிழில் எழுப்பப்பட்டாலும் அவைகளுக்குக் கொடுக்கக்கூடிய முதல் பதில்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தான் தரப்படுகின்றன. துணைக் கேள்விகளுக்குப் பதில்கள் தமிழிலேயே கொடுக்கப்பட்டாலும் முதல் கேள்விகளுக்குக் கொடுக்கப்படும் பதில்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தான் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் கொடுக்கப் படுவதால் அவற்றைப் புரிந்துகொண்டு உடனடியாகத் துணைக் கேள்விகளைக் கேட்க சில உறுப்பினர்களுக்கு முடியாமல் இருக்கிறது. அவற்றை மொழிபெயர்த்து புரிந்துகொண்டு துணைக் கேள்விகள் கேட்பதற்கும் சங்கடமாக இருக்கிறது. ஆகவே முதல் கேள்விகளுக்குக் கொடுக்கக்கூடிய பதில்களையும் தமிழிலேயே கொடுத்தால் அவற்றைப் புரிந்து கொண்டு துணைக்கேள்விகள் கேட்பதற்கு எவ்வளவோ வசதியாக இருக்கும். ஆகவே அவ்விதம் தமிழிலேயே பதில்களைக் கொடுக்க, வேண்டிய முயற்சிகளை அவையின் அரசாங்கக் கட்சி தலைவர் முயற்சி எடுக்க வேண்டும் என்று

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [2nd July 1962

கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நன்ருக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கனம் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபைத் தலைவர் அவர்களே, கூடிய வரையில் தமிழிலேயேதான் பதில்களைக் கொடுக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய கவனமும் செலுத்தப்பட்டுதான் வருகிறது. ஆனுல் சில சமயங்களில் அவ்வாறு பதில் அளிப்பதற்கு போதிய பக்குவம் இல்லாத காரணத்தாலும், அது தவருகப் போய் விடலாம் என்ற காரணத்தாலும் தான் ஆங்கிலத்திலேயே பதில் கொடுக்கப்படுகிறது. கூடிய சீக்கிரத்தில் எல்லாவற்றையுமே தமிழில் பதில் கொடுக்க, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுதான் வருகிறது. ஆனுல் ஆங்கிலத்தில் பதில் சொல்லும்போது சில உறுப்பினர்களுக்கு அது புரியவில்லை என்று சொன்னுல் அவற்றை தமிழில் சொல்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும். அப்படி எந்த அமைச்சர்களைக் கேட்டாலும் அவர்கள் தமிழிலேயே பதில் சொல்லுவார்கள். தமிழில் மொழி பெயர்த்து பதில் சொல்லுவார்கள். ஆகவே தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்று சொன்னுலும் அல்லது ஆங்கிலத்தில் சொல்லப்படும் பதில் புரியவில்லை என்று சொன்னுலும் அவற்றை மொழி பெயர்த்துச் சொல்லப்படும். எல்லா பதில்களையுமே தமிழில் சொல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுதான் வருகின்றன.

IV.—ADJOURNMENT MOTSON *re.* NON AVAILABILITY OF TEXT-BOOKS PRESCRIBED FOR MADRAS CORPORATION SCHOOLS.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram has given notice of a privilege motion and it will be taken up to-morrow.

He has also given notice of the following adjournment motion :—

'I move that the business of the Assembly be adjourned for discussing the following matter of urgent public importance :

"the non-availability of text-books prescribed for Standards I to V in the schools administered by the Corporation of Madras and the consequent hardship to a large number of students." '

The hon. Member will now state his case.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நேற்றைய தினம், சில கார்ப்பொரேஷன் உறுப்பினர்களும் பெற்ருேர்களும் என்னை சந்தித்து கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் வைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற புத்தகங்களின் காப்பிகள் கடைகளில் கிடைக்கவில்லை என்றும், அவைகளில் சிலது அச்சடிக்கப்படவில்லை என்றும் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து இரண்டு வாரங்களாகி